# எழுத்தாளர்கள் வளர்வதற்கான வயல் சாகித்ய அகாடமி

## தமிழ் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளர் கருத்து

**திருநெல்வேலி**

சாகித்ய அகாடமி நீங்கள் வளர்வதற்கான வயல். உங்கள் திறன் என்ன என்று பார்த்து அகாடமியை தொடர்பு கொள்ளுங்கள் என்று சாகித்ய அகாடமியின் தமிழ் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் அறவேந்தன் தெரிவித்தார்.




திருநெல்வேலியில் நடைபெற்ற திகசி நூற்றாண்டு விழா கருத்தரங்கில் சாகித்ய அகாடமியின் தமிழ் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் அறவேந்தன் பேசினார்.

திருநெல்வேலி ம.தி.தா. இந்து மேல்நிலைப்பள்ளியில் சாகித்ய அகாடமியும், பொதிகை தமிழ்ச் சங்கமும் இணைந்து தி.க.சி.யின் நூற்றாண்டு விழா கருத்தரங்கை நடத்தின. கருத்தரங்கை தொடங்கி வைத்து பேராசிரியர் அறவேந்தன் பேசியதாவது:

சாகித்ய அகாடமி 24 மொழிகளில் ஆண்டு முழுக்க பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகிறது. மாற்றுத் திறன் படைத்தவர்களை கொண்டு டெல்லியில் கவிதை வாசிக்கும் நிகழ்ச்சியை நடத்தியது. 3-ம் பாலினத்தவரை கொண்டு இலக்கிய நிகழ்ச்சியை நடத்தியது. இளைய தலைமுறையை எழுத வைக்க தி.க.சி. காலம் முழுக்க உழைத்தவர். தன்னைச் சுற்றி இலக்கிய காற்றை எப்போதும் வீசச் செய்தார். கலை சமூக வளர்ச்சிக்காகவே என்று கூறிய அவர், நல்ல படைப்பு அறிவியல் சார்ந்ததாக, அழகியல் சார்ந்ததாக, அறவியல் சார்ந்ததாக இருக்க வேண்டும் என நினைத்தார். சாகித்ய அகாடமி நீங்கள் வளர்வதற்கான வயல், உங்கள் திறன் என்ன என்று பார்த்து அதை தொடர்பு கொள்ளுங்கள் என்று தெரிவித்தார்.

சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் வண்ணதாசன், பேராசிரியர் பா. ஆனந்தகுமார் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.

பொதிகை தமிழ்ச் சங்க நிறுவனர் பே. ராஜேந்திரன் அறிமுக உரையாற்றினார். கருத்தரங்கில் முதல் அமர்வுக்கு தூய சவேரியார் கல்லூரி நாட்டார் வழக்காற்றியல் துறை முன்னாள் இயக்குநர் பேராசிரியர் நா.ராமச்சந்திரன் தலைமை வகித்து, 'மார்க்சியவாதி தி.க.சி' என்ற தலைப்பில் பேசினார். சாகித்ய அகாடமி விருதுபெற்ற எழுத்தாளர் கா. உதயசங்கர் 'தி.க.சி.யின் கடிதங்களும் கவிதைகளும்' எனும் தலைப்பிலும், பாளையங்கோட்டை சதக்கத்துல்லா அப்பா கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் சவுந்தர மகாதேவன், 'தி.க.சி. யின் திறனாய்வு அணுகுமுறை' எனும் தலைப்பிலும் ஆய்வுரை வழங்கினர். 2-வது அமர்வில் எழுத்தாளர் மு. முருகேஷ் 'இளம் எழுத்தாளர்களுக்கானவர் தி.க.சி' எனும் தலைப்பிலும், சாகித்ய அகாடமி விருது பெற்ற மொழிபெயர்ப்பாளர் பேராசிரியர் ப.விமலா "மொழிபெயர்ப்பாளர் தி.க.சி.' எனும் தலைப்பிலும், பேராசிரியர் நா. சுலேச்சனா 'தி.க.சி.யின் அஞ்சலட்டை எழுதும் கலை' எனும் தலைப்பிலும், 'மனிதத்தின் அழகியல் தி.க.சி.' எனும் தலைப்பில் பேராசிரியர் தி. முத்துலட்சுமியும் ஆய்வுரை நிகழ்த்தினர்.